S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி டிசம்பர் 12 * 2025 * மலர் -1 * இதழ்-194* VOL-1 * ISSUE-194 விலை ரூ.3 * பக்கம் -4

## ஜனவரியில் தமிழகம் வருகை:

# முதல்வர் ஸ்டாலினுடன் ராகுல் ஒரே மேடையில் பேசுகின்றனர்!

சென்னை, டிச.12

காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் மற்றும் பிரியங்கா ஆகியோர் ஜனவரியில் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இங்கு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ராகுல் காந்தி ஒரே மேடையில் பிரசாரம் செய்வார் என்று கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் சட்டசபை தேர்தல் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை எதிர்கொள்ள எல்லா கட்சிகளும் தயாராகி வருகின்றன. முக்கிய கட்சிகளின் தலைவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

சட்டசபை தேர்தல் நடக்க இன்னும் 4 அல்லது 5 மாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஆகவே தேசிய கட்சிகளின் தலைவர்களும் தமிழ்நாட்டுக்கு வந்து பிரசாரத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளார்கள்.

காங்கிரஸ் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் விருப்ப மனு அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. முதல் நாளிலேயே 20 பேர் மனு வழங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

அடுத்ததாக காங்கிரஸ் தலைவர்கள் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். அந்த



வகையில் ராகுல் மற்றும் பிரியங்கா ஆகிய இருவரும் ஜனவரி மாதத்தில் தமிழ்நாட்டுக்கு வர இருப்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.

ராகுல்காந்தியின்சுற்றுப் பயணத்தை ஒருங்கிணைப்பதற்காக 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிதிக்குழு தலைவராக தங்கபாலு, வாகன வசதி ஏற்பாட்டுத் தலைவராக திருநாவுக்கரசர், வரவேற்புக்குழு தலைவராக எம்.கிருஷ்ணசாமி, விளம்பரக் குழு தலைவராக கே.எஸ்.அழகிரி, பிரசாரக் குழு தலைவராக பீட்டர் அல்போன்ஸ், மாநாட்டு திடல் அமைப்பு தலைவராக ரூபி மனோகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பிரியங்காகாந்தியின் சுற்றுப்பயணத்தை ஒருங்கிணைப்பதற்காகவும் குழு அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் பேரணி ஒருங்கிணைப்புத் தலைவராக ஜோதிமணி அறிவிக்கப்பட்டுள்ளார். இதில் உறுப்பினர்களாக சுதா ராமகிருஷ்ணன் எம்.பி., முன்னாள் எம்.பி. ராணி, மகளிர் காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத், தாரகை கத்பர்ட், முன்னாள் எம்.எல்.ஏ. ராணி வெங்கடேசன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த இருவரின் பிரசாரம் மூலம் தமிழ்நாட்டில் காங்கிரசுக்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் உத்வேகம் அளிக்கும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர்கள் கூறுகின்றார்கள்.

தமிழ்நாட்டில் ராகுல் சுற்றுப்பயணம் செய்யும் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசுவார் என்று தெரியவந்துள்ளது. மேலும் இரு தலைவர்களும் ஒரே மேடையில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முழு விவரம் விரைவில் வெளியாகும்.



சேலத்தில் அமைச்சர் ராஜேந்திரன் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கலெக்டர் பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் உள்ள திடக்கழிவுகளை பயோ மைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.



கர்நாடக அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் குறைந்ததால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் பரிசல் சவாரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## ஓசூர் அருகே மாணவியிடம் பாலியல் சீண்டல்:

# அரசு பள்ளி ஆசிரியருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை!

## கிருஷ்ணகிரி கோர்ட்டு உத்தரவு!!

கிருஷ்ணகிரி, டிச.12

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அடுத்த கெம்பக்கரையை சேர்ந்தவர் லாரன்ஸ்(52). இவர் ஓசூர் அருகே உள்ள ஒரு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். இவர், கடந்த 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ம் தேதி அப்பள்ளியில் பயிலும் 5ம் வகுப்பு மாணவியை அழைத்து, பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். மேலும் இது குறித்து யாரிடமாவது கூறினால், அடித்துவிடுவேன் எனக்கூறி மிரட்டியுள்ளார். இருப்பினும் பள்ளி மாணவி, தன் பெற்றோரிடம் நடந்த தவற்றை கூறியுள்ளார். அவர்கள் தேன்கனிக்கோட்டை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் படி, போலீசார் ஆசிரியர் லாரன்ஸ் மீது போக்சோ வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

இவ்வழக்கு கிருஷ்ணகிரி மகளிர் விரைவு நீதிமன்றத்தில் கடந்த, 3 ஆண்டுகளாக நடந்து வந்த நிலையில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிபதி சுதா தன் தீர்ப்பில், குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியர் லாரன்சுக்கு, சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதற்கு, 5 ஆண்டு சிறை மற்றும், ரூ.ஆயிரம் அபராதமும், மிரட்டிதற்கு 1 ஆண்டு தண்டனை மற்றும், ரூ. ஆயிரம் அபராதம் விதித்தார். மேலும் தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும். அபராத தொகை கட்ட தவறினால் மேலும், 6 மாதம் சிறை தண்டனை விதித்தும் உத்தரவிட்டார். அரசு தரப்பில் வக்கீல் உமா தேவி மங்களமேரி ஆஜரானார்.







கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தனது ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியம், பாவந்தூர்ஊராட்சி 147வது பாகத்தில், "என்வாக்குச்சாவடி", "வெற்றி வாக்குச்சாவடி" எனும் தலைப்பிலான தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்களிடம் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகள்மற்றும்சிறப்புத்திட்டங்களைஎடுத்துரைத்தார்.



ஈரோடு – சென்னிமலை சாலையில் உள்ள வாய்க்கால் குறுக்கே நான்கு வழிப்பாலம் அமைக்கும் பணியினை அமைச்சர் முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார். அருகில் கந்தசாமி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டத்தில் மழை குறைந்து குளிர் அடிக்க தொடங்கி உள்ளது. காட்டேரி பூங்காவில் சுற்றுலா பயணிகள் இன்றி வெறிச்சோடி கிடக்கும் காட்சி.



வருசநாடு, மயிலாடும் பாறை பகுதியில் உள்ள இலவ மரங்களில் தொங்கியபடி பூ பஞ்சுகளை சேதப்படுத்தும் வவ்வால்களை படத்தில் காணலாம்.

# காலி மதுபாட்டில்களை திரும்பப் பெற கியூ.ஆர்., கோடு முறை அறிமுகம் ; டாஸ்மாக் நிறுவனம் முடிவு!

சென்னை, டிச.12

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு காரணமாக, காலி பாட்டிலை திரும்ப பெறும் திட்டத்தை, டாஸ்மாக் செயல்படுத்தி வருகிறது. நீலகிரி உட்பட, 22 மாவட்டங்களில், அத்திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. காலி மது பாட்டில் திரும்ப வாங்கும் திட்டத்தை எளிமையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் செயல்படுத்தும் முயற்சியில் டாஸ்மாக் நிறுவனம் , மாநிலத்தில் உள்ள அனைத்து சில்லறை விற்பனைக் கடைகளிலும் விற்பனைக்கு முன் பாட்டில்களில் ஒட்டப்படும் ஸ்டிக்கர்களுக்குப் பதிலாக கியூ. ஆர் குறியீடு முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியின் போது பாட்டிலில் நேரடியாக அச்சிடப்படும் கியூ. ஆர் குறியீடு, திரும்ப வாங்குவதற்கு தகுதியான பாட்டில்களை அடையாளம் காண உதவும். இந்த நடவடிக்கை கூடுதல் ஸ்டிக்கர்களின் தேவையை நீக்கி, பிழைகளைத் தடுக்கும்.இத்திட்டத்தில் தவறுகளை தடுக்க, மதுபான ஆலையில் இருந்து பாட்டில்களை கொள்முதல் செய்யும்போதே, பாட்டில் அடிப்புறத்தில், 'கியூ.ஆர்., கோடு ஸ்கேன்' அச்சிட்டு வாங்க, டாஸ்மாக் முடிவு செய்துள்ளது.

இது குறித்து டாஸ்மாக் அதிகாரிகள் கூறியதாவது:

தற்போதுகாலிமதுபாட்டிலைதிரும்பபெற, கடைஎண்குறிப்பிடப்பட்டுள்ள, 'ஸ்டிக்கர்' கடை ஊழியர்களுக்கு மொத்தமாக வழங்கப்படுகிறது.உற்பத்தியிலிருந்து சில்லறை விற்பனை மற்றும் திரும்புவதற்கு பாட்டில்களின் நகர்வைக் கண்காணிக்கவும், பாட்டில் தவறான பயன்பாட்டைக் குறைக்கவும், சரியான மறுசுழற்சியை உறுதி செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தவும் இது உதவும். உற்பத்தியின் போது கியூ. ஆர் குறியீடுகளைச் சேர்க்க மதுபான உற்பத்தி நிறுவனங்களுடன் நாங்கள் இப்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.அவர்கள், கடையில் பாட்டிலை விற்கும்போது ஒவ்வொன்றிலும், 'ஸ்டிக்கர்' ஒட்டி விற்கின்றனர். இதனால், பணிச்சுமை ஏற்படுவதாக கூறுகின்றனர்.சரிவர ஸ்டிக்கர் ஒட்டப்படாத நிலையில், காலி பாட்டிலை திரும்ப வழங்கும்போது, வாங்க மறுப்பதாக புகார் வருகிறது. எனவே, மதுபான ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யும் போதே பாட்டில் அடிப்புறத்தில், 'கியூ.ஆர்., கோடு ஸ்கேன்' அச்சிடப்பட்டு வாங்கப்படும். இதனால், கடைகளில் மது பாட்டிலை ஸ்கேன் செய்து விற்பதுபோல், திரும்ப பெறும்போதும், 'ஸ்கேன்' செய்து வாங்கப்படும்.இதனால், எந்த கடையில் மது பாட்டில் வாங்கப்பட்டதோ, அந்த கடையில் அதை திரும்ப வாங்குவது உறுதி செய்யப்படும். ஸ்டிக்கர் ஒட்ட வேண்டிய பணிச்சுமை ஏற்படாது.இவ்வாறு அவர்கள் கூறினர்.



மேயர் ஆர்.பிரியா , டிட்வா புயல் மழையின் காரணமாக, ஓட்டேரி, ஸ்ட்ராஹன்ஸ் சாலை சந்திப்பில் உள்ள உணவகக் கடைகளின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் காயம் ஏற்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்த மூன்று நபர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.5400/ வீதம் காசோலையினை ரிப்பன் கட்டட அலுவலகத்தில்வழங்கினார்.இந்நிகழ்வின்போது,புரசைவாக்கம்வட்டாட்சியர்குப்பம்மாள் இராமு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பந்தலூர் பகுதியில் உலா வரும் யானைகள்!

கூடலூர் டிச.12

கூடலூர் பந்தலூர் சுற்றுவட்டார பகுதியில் அதிக அளவு யானைகள் நடமாட்டம் காணப்படுகின்றன இந்நிலையில் இரவு மற்றும் பகல் வேலைகளில் குடியிருப்பு மற்றும் சாலை ஓரங்களில் யானைகளை சுற்றி திரிவது வழக்கமாக நடைபெற்ற வண்ணமே உள்ளது. இந்நிலையில் வனத்துறை பல்வேறு முயற்சி எடுத்து யானைகளை அடர்ந்த வனப் பகுதிக்கு விரட்டி விட்டாலும் மீண்டும் யானைகள் இரவு நேரங்களில் குடியிருப்பு பகுதிக்கு நோக்கி படையெடுத்து வருகின்றன. இந்த சூழலில் நேற்றைய தினம் கூடலூரில் இருந்து தேவ சோலைக்கு அரசு பேருந்து சென்று கொண்டிருந்த . அப்போதுஅரசு பேருந்து முன்பாக காட்டு யானைஒன்று ஒய்யாரமாக நடந்து சென்றதை கண்ட வாகன ஓட்டுநர் மெதுவாக வாகனத்தை இயக்கிச் சென்ற பொழுது ஹாரன் அடித்துச் சென்றார். ஆனால் அந்த யானை அங்கிருந்து சற்று கூட இடைவெளி தராமல் சிறிது தூரம் நடந்து சென்றது இதனை தொடர்ந்து யானைக்கு வாகன ஓட்டு மீண்டும் ஹரனை அடித்த பின்பே யானை சட்டு இடம் வட்டுச் சென்றதன் காரணமாக வாகனம் அங்கிருந்து நகர்ந்து சென்றது. இந்த சம்பவம் இணையதளங்களை பெரிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், பெரியசெவலை செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2025 2026ஆம் ஆண்டிற்கான கரும்பு அரவை பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் துவக்கி வைத்தார். உடன் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர்/செயலாட்சியர் இரா.முத்துமீனாட்சி, விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் கு.ஓம் சிவசக்திவேல், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் எஸ். விஸ்வநாதன், எம். சந்திரசேகரன் உட்பட பலர் உள்ளனர்.



# பந்தலூர் நெல்லியாளர் கிராம பகுதியில் ரூ.4.5 கோடி செலவில் புதிதாக 2500 மெட்ரிக் டன் அரிசி கிடங்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார்!!

பந்தலூர் டிச.12

நீலகிரி மாவட்டம் பந்தலூர் நெல்லியாளர் கிராம பகுதியில் புதிதாக நான்கரை கோடி செலவில் 2500 மெட்ரிக் டன் அரிசி கொள்ளளவு கொண்ட புதிய செயல்முறை கிடங்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் தொகுதி மேற்பார்வையாளர் குமார். கூடலூர் கோட்டாட்சியர் குணசேகரன். பந்தலூர் தாசில்தார் சர்புதீன் நிஷா. சிவில் சூப்பர்வைசர் குணசேகரன் .செயற்குழு உறுப்பினர்கள் திராவிட மணி. காசிலிங்கம். பொதுக்குழு உறுப்பினர் அமைதலிங்கம். நெல்லியாலநகரமன்றதலைவிசிவகாமி.துணை தலைவர் நாகராஜன். மாவட்ட திட்ட குழு உறுப்பினர் ராஜேந்திரன் .பந்தலூர் நகர செயலாளர் சேகரன். துணை செயலாளர் சிவசுப்பிரமணி. பொருளாளர் தென்னரசு. கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன். பந்தலூர் மத்திய ஒன்றிய செயலாளர் மாங்கோடு ராஜா. கூடலூர் ஒன்றிய செயலாளர் உத்தமன். மாவட்ட பிரதிநிதிகள். குமார். நாகராஜ் கணபதி. துணை செயலாளர் பாக்கியநாதன் அவைத்தலைவர் கோபாலகிருஷ்ணன். மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆலன். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முரளிதரன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் நுகர்வோர் வணிக வியாபாரி அன்பர்கள் பொதுமக்களை என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் அரசு கொறடா ராமச்சந்திரன் குத்துவிளக்கை ஏற்றினார் பின்பு பத்திரிக்கையாளரிடம் அவர் பேசுவையில் நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலமாக பந்தலூர் நெல்லியாள கிராம பகுதியில் கட்டப்பட்டுள்ள இந்த குடோனை தமிழக முதல்வர் தலைவர் சென்னையில் இருந்து காணொளி வாயிலாக இன்று திறந்து வைத்துள்ளார்கள் .

இந்த குடன் என்பது இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு மிக மிக அவசியமான ஒன்று இது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது இன்று நான்கரை கோடி ரூபாய் செலவில் இந்த குடோன் இங்கு கட்டப்பட்டு கிட்டத்தட்ட 2500 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்டது.

கிட்டத்தட்ட 44 ரேஷன் கடைகளுக்கு இங்கு இருந்து வாணிபக் கிடங்கில் கொடுக்கக்கூடிய பொருட்கள் அனைத்து கடைகளுக்கும் போகும் இதில் 44 கடைகளில் ஏறக்குறைய 30 ஆயிரத்து 444 ரேஷன் அட்டைகள் இதில் அடங்கும் அத்தனை குடும்பங்களுக்கும் இன்று முதல் இந்த குடோனில் இருந்து பொருட்கள் எடுத்துச் செல்ல பணிகள் மேற்கொள்ளப்படும் .சிறப்பாக பணியை செய்து கொடுத்த முதலமைச்சர்களுக்கு மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என அவருக்கு கூறினார்



# கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்!

தாராபுரம் டிச.11

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தென்னிந்திய திருச்சபை திருச்சி தஞ்சை திருமண்டலம் கொளிஞ்சிவாடி, சிஎஸ்ஐ அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் கிறிஸ்மஸ் கலை நிகழ்ச்சி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிஎஸ்ஐ தாராபுரம் மறை மாவட்ட தலைவர் அருட்திரு, பால் சுந்தர் சிங் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக சமூக சேவகர் சிவசங்கர் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு கிறிஸ்மஸ் பரிசுகள் வழங்கினார்கள். பள்ளியின் தாளாளர் பாலராஜசேகர் வாழ்த்துரை வழங்கினார். பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி சுகுணா பாய் தலைமையாசிரியர் {பணி நிறைவு }, தூய தோமா சேகர செயலாளர் முனைவர் தனராஜ் பொம்மலாட்டம், தனிநபர் நடனம், குழு நடனம், நடத்தினார்கள். இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி சாராள் கிறிஸ்டி, ஆசிரியர்ஷீலா ராணி மறறும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மாணவ மாணவிகள் சுமார் 50 பேருக்கு மேற்பட்டவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இலவச ஆங்கிலம், சித்த மருத்துவ முகாம்!

உளுந்தூர்பேட்டை டிச.12

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பாலி என்ற இடத்தில் JSA மல்டி ஸ்பெசிலிட்டி மருத்துவமனை,சித்த மருத்துவ ஆராய்ச்சி கல்லூரி மற்றும் பொது மருத்துவமனையில் ஜி. சிவராஜ் சமூக ஆர்வலர் மற்றும் தொழிலதிபர்,அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். கல்லூரி நிறுவனர் முனைவர்.க.ஜெயராமன் அவர்கள் முன்னிலை வைத்தார். செயலாளர் அருண் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி இயக்குனர் மருத்துவர் கண்மணி அருண் அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்காக நான்கு நாட்கள் இலவச சித்த மற்றும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயனடைந்தனர் .இந்த மருத்துவ கல்லூரிகலுக்கு தினசரி செல்ல பொது மக்களுக்கு பேருந்து வசதிகள் உளுந்தூர் பேட்டையில் இருந்து இலவசமாக உள்ளது.



# புதுக்கோட்டை அருகே கே.வி.கோட்டையில் பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டா, நலத்திட்ட உதவி வழங்கும் முகாம்!

புதுக்கோட்டை,டிச.12

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கே வி கோட்டை ஊராட்சி மக்கள் தொடர்பு முகாமில் பய னாளிகளுக்கு வீட்டு மனை பட்டா மற்றும் நலத்தி ட்ட உதவிகளைஅரசடிபட்டி 4 ரோட்டில்தனியார் தி ருமண மாஹாலில் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன் முன்னிலையில்,மாவட்ட கலெக்டர் அருணா தலைமையில் நடைபெற்றது.

முகாமில், மாவட்ட கலெக்டர் கண்காட்சி அரங்குக ளை சுற்றி பார்வையிட்டார்.வருவாய்த்துறை, வே

ளாண்மைத்துறை, வேளாண் பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை மலைப்பயிர்கள் துறை, பி ற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உள்ளிட்ட பல் வேறு துறைகளின் சார்பில் 136 பயனாளிகளுக்கு ரூ.1,23,30,355 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார். மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பொது சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.கண்காட்சி மூலம் பொ துமக்கள் அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள் மற் றும் சாதனைகள் பயனடையலாம்.

தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) முனுசாமி, இணை இயக்குநர் சங்கரலட்சுமி, மாற் றுத்திறனாளிகள் நல அலுவலர் புவனா,மாவட்ட வேளாண்மை அலுவலர் மகேஸ்வரி திருவரங்குளம் வட்டார மருத்துவர் ராம்சந்தர் ஆலங்குடி பேரூரா ட்சித் தலைவர் ராசி முருகானந்தம்,செயல் அலுவ லர் கோமதி, திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலு வலர்கள் முத்துராமன்,ரமேஷ் அரசு அலுவலர்கள் பயனாளிகள் கலந்துகொண்டனர். ஆலங்குடி தா சில்தார் வில்லியம் மோசஸ் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாநகரம் கவிநாடு கிழக்கு கணக்கம்பட்டி மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 10க்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டதை அடுத்து புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு குழந்தைகளிடம் மாநகரச் செயலாளர் வே. ராஜேஷ் நலம் விசாரித்து மருத்துவர்களிடம் உரிய சிகிச்சை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.



# ஏ எப்புர்ரா! மோட்டரே இல்லாத பம்புக்கு பில்லு க்ளியர் பண்ண ஊராட்சி மன்ற தலைவரின் தில்லாலங்கடி செயல்!

## கொந்தளித்த வார்டு உறுப்பினர்கள்!!

திருப்பத்தூர் டிச.12

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார் பேட்டை அடுத்த பால்நாங்குப்பம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவராக தேன்மொழி ரமேஷ் உள்ளார்.

இந்த நிலையில் இந்த ஊராட்சியில் பெருமாள் வட்டம் மற்றும் மச்சக்கண்ண் வட்டம் அளித்த பகுதிகளில் 15 வது மாநில குழுவில் இருந்து மின்மோட்டார் அமைக்கப்பட்டதாக கூறி சுமார் ஒரு லட்சத்து 74 ஆயிரம் என இரண்டு இடங்களில் பில் கிளியர் செய்துள்ளார்.

இதனை அறிந்த அந்த ஊராட்சியில் வார்டு உறுப்பினர்கள் பால்னாங்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் பல்வேறு முறைகேடுகள் செய்துள்ளதாக குற்றம் சாட்டினர் அதுமட்டுமில்லாமல் மோட்டாரே இல்லாமல் மின்மோட்டார் இயக்கப்படுவதாக கூறி பில் எடுத்ததாக வார்டு உறுப்பினர்கள் குற்றம் சாட்டி ஆழ்துளை கிணற்றிலிருந்து ஒரு பைப்பை மட்டும் எடுத்து காண்பித்து செய்தியாளர்களிடம் ஆதங்கத்தை கொட்டி தீர்த்தனர்.

மேலும் ஒரே ஒரு பைப்புக்காக லட்சங்களை ஊராட்சி மன்ற தலைவர் ஆட்டைய போட்டு எனவும் அதேபோல இந்த ஊராட்சியில் பல்வேறு முறைகேடுகளில் ஊராட்சி மன்ற தலைவர் ஈடுபட்டதாகவும் அதற்கு உடந்தையாக கிளார்க் சரவணன் செயல்படுகிறார் என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வைத்தனர்..

இது குறித்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

ராயல்ஓக் ஃபர்னிச்சர்

# ராமநாதபுரத்தில் தனது பிளாக்ஷிப் ஸ்டோரை திறந்து, சிறந்த சர்வதேச கலெக்ஷனை அறிமுகப்படுத்தியது!

ராமநாதபுரம் டிச.12



இந்தியாவின் நம்பர் 1 ஃபர்னிச்சர் பிராண்டான ராயல்ஓக் ஃபர்னிச்சர் தனது முதன்மை பிளாக்ஷிப் ஸ்டோரையும் கண்ட்ரி ஸ்டோர் கலெக்ஷனையும் இராமநாதபுரத்தில் அறிமுகப்படுத்தியது. இந்த விழாவில் ராமநாதபுரம் இன்கார்பரேஷன் பிரைவேட் லிமிடெட் தலைவர் ஸ்ரீ. விஜய் சுப்பிரமணியம், ராயல்ஓக் இன்கார்பரேஷன் நிர்வாக இயக்குநர் ஸ்ரீ. மதன் சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பாக கலந்து கொண்டனர். 10,000 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவில் அமைந்த இந்த ஸ்டோர், லிவிங் ரூமிலிருந்து படுக்கையறை, அலுவலகம், வெளிப்புறம் உள்ளிட்ட வீட்டு அனைத்து தேவைகளுக்கும் சர்வதேச தரத்திலான ஃபர்னிச்சர்களை ஒரே இடத்தில் வழங்குகிறது. இந்த திறப்பு விழாவில் பிரான்சைஸ் தலைவர் கிரண் சபாரியா, VM & New Store Opening தலைவர் தம்மையா கோடேரா, TN & Kerala பிராந்தியத் தலைவர் ரஞ்சித் கப்பட்டு, கிளஸ்டர் மேலாளர் சுரேஷ் குமார், பிரான்சைசி கூட்டாளர்கள் எஸ். தீபக், வி. ஜி. ஜெகன், ஜி. கார்த்திக் உள்ளிட்ட ராயல்ஓக் குழுவினர் பங்கேற்றனர். மாநிலத்தில் பல ஆண்டுகளாக ராயல்ஓக் உருவாக்கிய வேலைவாய்ப்பு விரிவாக்கத்தை இது மேலும் வலுப்படுத்துவதோடு, எதிர்கால வணிக வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளையும் திறக்கிறது. திறப்பு விழாவில் உரையாற்றிய ராயல்ஓக் தலைவர் விஜய் சுப்பிரமணியம், இந்த சந்தை வேகமாக வளரும் என்ற நம்பிக்கையையும் அவர் பகிர்ந்து, பிராஞ்சைஸ் கூட்டாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை அருகே போக்சோ சட்டத்தில் கைதான வடமாநில இளைஞர் தப்பி ஓட்டம்!

## மாவட்ட முழுவதும் போலீசார் தீவிர வேட்டை!!

புதுக்கோட்டை,டிச.12

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே 15 வயது சிறுமியை பாலியல் தாக்குதல் செய்து மூன்று மாதம் கர்ப்பமாக்கிய ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞரை போக்சோ வில்கைதுசெய்துநீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கஆலங்குடிஅனைத்து மகளிர் காவல் துறையினர் அழைத்துச் சென்ற போது போலீசார் பிடியிலிருந்து தப்பி ஓட்டம், சிறை வாசலில் உள்ள உணவகத்தில் இரவு உணவு உண்ட வட மாநில இளைஞர் கை கழுவும் பொழுது தப்பி ஓடியதால் பரபரப்பு, தப்பி ஓடிய வட மாநில இளைஞரை இரவோடு இரவாக தேடுதல் பணியில் 200 போலீசார் தீவிரம். புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே உள்ள ஒரு ஹா லோ பிளாக் நிறுவனத்தில் 15 வயது சிறுமியும் ஒடிசா மாநிலம் ராயகாடா மாவட்டத்தை சேர்ந்த மகேந்திரா கமாங்கா என்ற 23 வயது இளைஞரும் பணிபுரிந்து வந்துள்ளனர். இந்நிலையில் அந்த சிறுமிக்கும் மகேந்திரா கமாங்காவுக்கும் ப ழக்கம் ஏற்பட்டு சிறுமியை மகேந்திரா கமாங்கா பாலியல் தாக்கு தல் செய்தலில் சிறுமி மூன்று மாதம் கர்ப்பிணியாக உள்ளார்.



இந்நிலையில் தற்பொழுது அந்த சிறுமி புதுக்கோட்டை ராணி யார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரக்கூடிய நிலையில் சிறுமியிடம் வாக்குமூலம் பெற்ற ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் துறையினர் சிறுமியை கர்பமாக்கிய ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த மகேந்திரா கமாங்காவை போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திவிட்டு 15 நாள் நீதிமன்ற காவலில் புதுக்கோட்டை மாவட்ட சிறையில் அடைக்க ஆலங்குடி அனைத் து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மனமல்லி தலைமையிலா ன 2 பெண் காவலர்கள் ஒரு ஆண் காவலர் ஆகியோர் காவல்துறையின் ஜீப்பில் அழைத்துச் சென்றுள்ளனர்.

அப்போது புதுக்கோட்டை மாவட்ட சிறை எதிரே உள்ள உணவகத் தில் போலீசார் போக்சோவில் கைதான வடமாநில இளைஞர் மகேந்திரா கமாங்காவை இரவு உணவு உண்ண வைத்துள்ளனர். அப்போது இரவு உணவை உண்டு முடித்த மகேந்திரா கமாங்கா உணவக வாசலில் கை கழுவும் போது போலீசார் கண்ணிமைக் கும் நேரத்தில் அவர்களது பிடியிலிருந்து தப்பி ஓடி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஆலங்குடி அனைத்து மகளிர் காவ ல் துறையினர் மகேந்திரா கமாங்காவை துரத்திப் பிடிக்க முயற் சி செய்தும் முடியாத நிலையில் இது குறித்து மாவட்ட காவல் து றை கண்காணிப்பாளருக்கு போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். மாவட்ட எஸ்பி உத்தரவின் பெயரில் 200 போலீசாரும் புதுக்கோ ட்டை மாவட்ட சிறையை சுற்றியுள்ள பகுதிகளிலும் லாரிகள் பே ருந்துகள் சந்தைப்பேட்டை ரயில்வே நிலையம் பேருந்து நிலைய ம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் டார்ச் லைட் செல்போனில் உள்ள லைட் உதவியுடன் இரவோடு இரவாக தேடி வருகின்றனர்

அதோடு மட்டுமின்றி தப்பிச்சென்ற வட மாநில இளைஞர் மகேந் திரா கமாங்காவின் புகைப்படத்தை வாட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு போக்சோ வழக்கில் கைது செய்யப் பட்ட வடமாநில இளைஞர் சிறையில் அடைக்க அழைத்துச் செல் லும் பொழுது செல்லும் வழியில் தப்பி சென்றதாக கூறியும் அவ ர் குறித்து தகவல் தெரிந்தால் உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கூறி செல்போன் எண் ணையும் வெளியிட்டு பொதுமக்கள் உதவியும் காவல்துறையி னர் நாடியுள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் சித்தலிங்கமடத்திலிருந்து எடப்பாளையம் செல்லும் வழி தடத்தில் புதிய சாலை அமைப்பதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்ம.ஜெயச்சந்திரன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர்கண்ணன், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கு.ஓம் சிவசக்திவேல், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்விஸ்வநாதன், திருவெண்ணெய்நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்பாலசுப்பரமணியன், முல்லை உட்பட பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டைமாவட்டகலெக்டர்அலுவலகத்தில்நடந்தஉலகமாற்றுத்திறனாளிகள் தின விழாவில்கலந்து கொண்ட கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் காந்தி மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் அரசு நல உதவிகளை வழங்கினார். உடன் கலெக்டர் சந்திரகலா எம்எல்ஏ ஈஸ்வரப்பன்,டி ஆர்ஓ தனலிங்கம். மாற்றுத்திறனாளிகள் நல மாவட்ட அலுவலர் வசந்த ராமகுமார், டவுன்சேர்மன்கள் ராணிப்பேட்டை சுஜாதா வினோத், வாலாஜா ஹரிணி தில்லை, ஆற்காடு தேவி பென்ஸ் பாண்டியன்,யூனியன்சேர்மன்கள்ஆற்காடுபுவனேஸ்வரிசத்தியநாதன்,நெமிலிவடிவேலு, அரக்கோணம் நிர்மலா சௌந்தர்.ராணிப்பேட்டை டவுன் துணை சேர்மன்ரமேஷ் கர்ணா, மற்றும் பலர் இருந்தனர்.



# திருப்பத்தூரில் மத்திய அரசை கண்டித்து ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் நகல் எரிப்பு போராட்டம்!

திருப்பத்தூர் டிச.12

திருப்பத்தூர் நகராட்சி பாரத ஸ்டேட் வங்கி எதிரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் மத்திய அரசை கண்டித்து நகல் எரிப்பு போராட்டம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் முல்லை மற்றும் தாலுக்கா செயலாளர் ஆனந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சாமிநாதன் மற்றும் சிபிஐ கட்சியின் மாவட்ட செயலாளர் நந்தி ஆகியோர் கலந்து கொண்டு நகல் எரிப்பு போராட்டத்தை துவக்கி வைத்து கண்டன உரையாற்றினர். அப்போது மத்திய அரசு புதிதாக கொண்டு வந்துள்ள விதைச்சட்டத்தை திரும்ப பெற வேண்டும், மின்சாரத் திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும், விவசாயத்தை தனியார்களுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் நிர்வாகிகள் சிங்காரம், காமராஜ், ராஜா, வீரபத்திரன், கேசவன், காசி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தஞ்சையில் இ பைலிங் திட்டத்தை ரத்து செய்ய கோரி வழக்கறிஞர்கள் உண்ணாவிரத போராட்டம்!

தஞ்சாவூா்.டிச.12

தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில், வழக்கு ஆவணங்களை இணைய வழியில் சமர்ப்பிக்கும் 'இபைலிங்' என்ற டிஜிட்டல் நடைமுறை திட்டம் கடந்த 1ம் தேதி முதல் தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு வழக்கறிஞர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து தொடர்ந்து போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையொட்டி தஞ்சாவூர் மணி மண்டபம் அருகே உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு தஞ்சாவூர் வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் சங்க தலைவர் திராவிட செல்வன் தலைமையில்உண்ணாவிரதபோராட்டம் நடைபெற்றது.

சங்க செயலாளர் அருண்குமார், முன்னாள் தலைவர் அன்பரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் இபைலிங் திட்டத்தை ரத்து செய்து பழைய நடைமுறையை தொடர வேண்டும். வழக்கறிஞர்கள்பாதுகாப்புசட்டத்தைஉடனே இயற்ற வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது .

# கொடைக்கானலில் போதை காளான் விற்க முயன்றவர் கைது!

கொடைக்கானல் டிச.12

கொடைக்கானலில் டூரிஸ்ட்களிடம் போதை காளான் விற்க பேரம் பேசிய நபரை போலீசார் கைது செய்தனர்.

போதை காளானை தேடி கேரளா, கர்நாடகா வாலிபர்கள்கொடைக்கானலை நாடி வரும் சூழல் அதிகரித்துள்ளது. போதை காளானை சாப்பிடுவது போன்று ரீல்ஸ் எடுத்து இன்ஸ்டாகிராம் போன்ற வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்கின்றனர். போதை பொருட்களை ஒழிப்பதில் காவல்துறையினருக்கு பெரும் சவாலாகவே உள்ளது.



இந்நிலையில் போலீசார் பாம்பார்புரம் பகுதியில் ரோந்துசென்றபோது, டூரிஸ்ட்களிடம்போதைகாளனை விற்க பேரம் பேசிய நபரை போலீசார் விசாரித்தனர்.

விசாரணையில் பாம்பார்புரம் பகுதியை சேர்ந்த மணி 48, தெரிந்தது.

அவரிடமிருந்த போதை காளான்களை பறிமுதல் செய்து போலீசார் அவரை கைது செய்தனர்.



# சருவலையபட்டி ஸ்ரீ வீரகாளியம்மன் கோவில் பூத்தட்டு திருவிழா!

மேலூர் டிச.12

மதுரை மாவட்டம், மேலூர் அருகே சருகுவலையபட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீ வீரகாளியம்மன் கோவில் பூத் திருவிழா 9ந் தேதி நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் பால்குடத்தை மந்தை திடலில் இருந்து எடுத்து புறப்பட்டு ஸ்ரீ வீரகாளியம்மன் கோவிலுக்கு ஊர்வலமாக சென்று வீரகாளியம்மனுக்கு விஷசே அபிஷேகம் செய்தனர்.மாலை3மணியளவில்ஸ்ரீவீரகாளியம்மன் கோவிலில் இருந்து சாமி ஊர்வலம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் சருகுவலையபட்டி, மணப்பட்டி, ஒத்தபட்டி, மெய்யப்பன்பட்டி, அண்ணா நகர், அரியூர்பட்டி, சுப்பிரமணியபுரம் மேற்குவளவு, ஒத்தவளவு,

லெட்சுமிபுரம் ஆகிய பகுதியில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மந்தைகோவிலில் இருந்துபூத்தட்டுஎடுத்துபுறப்பட்டுவீரகாளியம்மன் கோவில் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஆண்டி நாட்டாமை, அழக நாட்டாமை, நோட்டம், சருகுவலையபட்டி கிராமபொதுமக்கள், இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## "TASC நிறுவனம், சேல்ஸ்ஃபோர்ஸின்

# ஏஜென்ட்ஃபோர்ஸை பயன்படுத்தி ஸ்டாஃபிங் முறையை புதுப்பிக்கிறது!



சென்னை டிச.12

சேல்ஸ்ஃபோர்ஸ், உலகின் முதன்மையான AI CRM நிறுவனமாக, TASC அவுட்சோர்சிங்குடன் முக்கியமான கூட்டாண்மையை அறிவித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், TASC தனது ஸ்டாஃபிங் மற்றும்HR செயல்பாடுகளை சேல்ஸ்ஃபோர்ஸ் ஏஜென்ட்ஃபோர்ஸ் தளத்தில் ஒருங்கிணைத்து, தானியங்கி AI ஏஜென்ட்களைக் களமிறக்கிறது. இது TASCஇன் சேல்ஸ், ரெக்ரூட்மென்ட் மற்றும் ஆபரேஷன்ஸ் செயல்களை வேகமாகமேம்படுத்துவதோடு,பணியாளர்களைதுல்லியமாக தேர்ந்தெடுத்தலும், வாடிக்கையாளர்களுடன் உறவை உறுதிப்படுத்துவதும் உதவுகிறது. TASC, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா மற்றும் MENA பிராந்தியத்தில் 8,000+ ஊழியர்களுடன் செயல்படும் பன்னாட்டு ஸ்டாஃபிங் நிறுவனம், இப்போது சேல்ஸ் மற்றும் மார்க்கெட்டிங் பணிகளை ஒன்றிணைத்து செயல்படுகிறது. சேல்ஸ்ஃபோர்ஸ் தளத்துடன் இந்த புதிய இயக்கம், TASCஇன் ATS மற்றும் ERP போன்ற கருவிகளுடன் இணைந்து, வேகமான பதிலளிப்பு மற்றும் ஒருங்கிணைப்பை எளிதாக்குகிறது. மேலும், AI ஆதரவில் இரண்டு புதிய ஏஜென்ட்கள், லீட் சோர்ஸிங் மற்றும் அவுட்ரீச் ஏஜென்ட்கள், சிறந்த தரவுகளை சேகரித்து வாடிக்கையாளர்களுடன் உறவை மேம்படுத்தி வருகின்றன. சேல்ஸ்ஃபோர்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மன்கிரன் சௌஹான் மற்றும் TASCஇன் தலைமைப் டிரான்ஸ்ஃபார்மேஷன் ஆபிசர் ரிச்சர்ட் ஜாக்சன், இந்த கூட்டுறவை தொழில்நுட்பத்தின் மூலம் வணிகத்தின் எதிர்காலத்தை மையப்படுத்துவதற்கான முக்கிய முயற்சியாக முன்வைத்தனர்.

## "பிலிப் மோரிஸ் இந்தியா, 2025 ல் சட்டவிரோத

# புகையிலை வர்த்தகத்திற்கு எதிரான போரில் புலனாய்வு நடவடிக்கைகள் ,மூலோபாய கூட்டாண்மைகளை வலுப்படுத்துகிறது"!

கடலூர் டிச.12

இந்த முயற்சிகள், இந்தியாவில் சட்டவிரோத சிகரெட்டுகளின் வருகையை தடுக்கும் மற்றும் சிகரெட் கடத்தலுக்கு எதிரான தேசிய முன்னுரிமைகளை ஆதரிப்பதில் பிஎம் இந்தியாவின் உறுதிப்பாட்டை காட்டுகின்றன.

யூரோமானிட்டர் இன்டர்நேஷனல் தரவின்படி, இந்தியா உலகளவில் சட்டவிரோத சிகரெட் நுகர்வில் நான்காவது இடத்தில் உள்ளது. சமீபத்திய அறிக்கைகள், 2025 ஆம் ஆண்டில் ₹600 கோடி மதிப்பில் கடத்தப்பட்ட சிகரெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறுகின்றன. முக்கியமாக, வடகிழக்கு இந்தியா, மகாராஷ்டிராகோவா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள், கடத்தலின் மிகப் பெரிய மையமாக மாறியுள்ளன. பிலிப் மோரிஸ் இந்தியாவின் நிர்வாக இயக்குனர் நவனீல் கர், "சட்டவிரோத புகையிலை வர்த்தகத்தை எதிர்க்கும் முயற்சி நீண்ட கால கூட்டுமுயற்சியாக இருக்கும்," என்றார். 2025இல், பிஎம் இந்தியா 50க்கும் மேற்பட்ட முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து, சந்தை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட தடமறிதல் அமைப்புகள் மூலம் கூட்டு நடவடிக்கைகளை ஆழப்படுத்துகிறது. இது, அரசின் சீர்திருத்தங்களை ஆதரித்து, இந்தியாவில் ஒரு பாதுகாப்பான புகையிலை சூழலை உருவாக்கும் நோக்கத்தில் பணியாற்றுவதாக இருக்கிறது.




நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 2ம் கட்டம் தொடக்க விழா குறித்து, துறைச் சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



2026 ஆம் ஆண்டு எருது விடும் விழா நடத்துவது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விழா ஒருங்கிணைப்பாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா. சுப்புலெட்சுமி, தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், வருவாய் கோட்டாட்சியர்கள் வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கடலூர்மாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்,உலகமனிதஉரிமைகள்தினத்தினை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி தலைமையில் மனித உரிமைகள் உறுதிமொழியினை அனைத்துத் துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியரின் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) தீபா உட்பட பலர் உள்ளனர்.



# கம்பத்தில் ஐக்கிய விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பாக மத்திய ரசின் விதைக் கொள்கையை கண்டித்து நகல் எரிப்பு போராட்டம்!

கம்பம் டிச.12

தேனி மாவட்டம் கம்பத்தில் ஐக்கிய விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பாக மத்திய அரசின் விதைக் கொள்கையை கண்டிக்கும் விதமாக நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்தியா முழுவதும் மத்திய அரசு கொண்டுவந்துள்ள விதைக் கொள்கை மற்றும் மின்சாரம் தனியார் மயமாக்குதல் ஆகிய கொள்கைகளை கண்டிக்கும் விதமாக நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த நகல் எரிப்பு போராட்டத்திற்கு ஏரியா குழு தலைவர் கர்ணன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கல்யாண சுந்தரம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். இந்தப் போராட்டத்தில் தலைவர்கள் கண்டன உரை ஆற்றினார்கள் அதன் பின் கையில் வைத்திருந்த நகலை தீயிட்டு கொளுத்தினார்கள். அருகில் இருந்த காவல் துறையினர்கள் நகல் எரிப்பை தடுத்து நிறுத்தி தண்ணீர் கொண்டு நகலில் எரிந்த நெருப்பை அணைத்தனர்.இந்த போராட்டத்தில் ஐக்கிய விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள், சிபிஐ சிபிஎம் கட்சி நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாவிடுதிக்கோட்டை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



ஊத்தங்கரைபேரூராட்சிக்குட்பட்டபகுதியில்இலவசவீட்டுமனைபட்டாவழங்குவதில் முறைகேடு நடந்திருப்பதாக குற்றம் சாட்டி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### ஊத்தங்கரை பேரூராட்சி பகுதியில்

# இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதில் முறைகேடு?

## பொது மக்கள் போராட்டம்!

**ஊத்தங்கரை டிச.12**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சிக்கு ட்பட்ட சுண்ணால ம் பட்டி தரப்பு கலைஞர் நகர் பகுதியில் ஆதி திராவிடர் சமுதாய மக்களுக்கு தமிழ்நாடு அரசு இலவச வீட்டு மனை பட்டா வழங் கியதில் முறையீடு நடைபெற்றுள்ளதாக கூறி 200க்கும் மேற்பட்ட மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற் பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த அக்டோபர்மாதம்தமிழகமுதல்வர்கலந்து கொண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வீடு இல்லாத ஏழை,எளிய மக்களுக்கு 85,000 பட்டா வழங்கப்படும் என்று அறி வித்து முதல் கட்டமாக சில பேருக்கு பட் டாக்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கி னார். இதில் ஊத்தங்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட சுண்ணாலம்பட்டி தரப்பு கலை ஞர் நகரில் வீடற்ற, நிலம் இல்லாத ஏழை,எளிய ஆதிதிராவிடர் மக்களுக்கு சுமார் 150 இலவச வீட்டு மனை பட்டா வழங்க உத்தேசிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு நடைபெற்றது. இத்தேர்வில் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை சார் பில் தகுதியற்ற நபர்களுக்கும்,வெளியூர் நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள் ளதை அறிந்த ஊத்தங்கரை பகுதி மக்கள் கலைஞர் நகர் பகுதியில் கூடினார்கள். ஊத் தங்கரையை சேர்ந்த பேரூராட்சிக்கு உட் பட்ட மக்கள் தங்களுக்கு தகுதி இருந்தும் வழங்கவில்லை என கூறி 200 க்கும் மேற் பட்ட மக்கள் மறியல் மற்றும் குடிசை அமைக்கும் போராட்டத்தை தொடங்கி னர். போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்க ளிடம் ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் முருகன், வட்டாட்சியர் ராஜலட்சுமி ஆகி யோர் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற கலெக்டர் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன் பேரில் மக்கள் கலைந்து சென்றனர். இது குறித்து வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்டபோது, ஊத்தங்கரை ஒன்றியத் துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் இருந்து பட்டாக்கள் பெற்றிருந்தால் அதை ரத்து செய்தும், பேரூராட்சிக்கு உட்பட்ட வீடற்ற ஏழை,எளிய ஆதி திராவிட மக்க ளுக்கு பட்டா வழங்க ஆவண செய்யப்ப டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர். ஏ .ஜே .மணி கண்ணன் புதிய பேருந்து சேவையினைஇன்றுகொடியசைத்து துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை ஒன்றிய பெருந்தலைவர் ராஜவேல் தொழிலாளர் முன்னேற்ற சங்க மண்டல துணை செயலாளர் கூவாகம். ஜி .ராதாகிருஷ்ணன். மயிலம் குப்பம் பி சங்கர். போக்குவரத்து கழக துணை மேலாளர் சிவகுமார், கவுன்சிலர் கணேசன் மற்றும் கிளை கழக செயலாளர்கள் கழக உறுப்பினர்கள். மற்றும் கிராம பொதுமக்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.

### சட்டசபை தேர்தலில்

# அ.தி.மு.க - பா.ஜ.க. அணியை தி.மு.க. வீழ்த்த வேண்டும்!

## ஆம் ஆத்மி மாநில தலைவர் பேட்டி!!

**எடப்பாடி டிச 12**

சேலம் மாவட்டம் எடப் பாடி சட்டமன்ற தொகுதி யில் ஆம் ஆத்மி கட்சியின் நிர்வாகிகளுக்கான ஆலோசனை கூட்டம் எடப்பாடி சட்டமன்ற தொகுதி தலைவர் குமரே சன் தலைமையில் நடை பெற்றது.



இக்கூட்டத்தில் ஆம் ஆத்மி கட்சியின் மாநில தலைவர் வசிகரன் சிறப்பு அழைப்பாளராக பங் கேற்று பல்வேறு ஆலோச னைகளை வழங்கினார்.

தொடர்ந்து அவர் பத்தி ரிகையாளரிடம் போதும் போது,

தமிழகத்தில் திமுக ஆட்சி சிறப்பாக செயல் பட்டு வருவதாகவும், பிஜேபி மற்றும் அதிமுக ஆகிய இரண்டு கட்சிக ளையும் வீழ்த்த வேண் டும் என்றும் பேட்டி அளித் தார்.

அப்போது ஆம் ஆத்மி கட்சியின் எடப்பாடி சட்ட மன்ற தொகுதிநிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அகில இந்திய விவசாயிகள் மகாசபா மற்றும் அகில இந்திய விவசாய கிராமப்புற தொழிலாளர் சங்கம் மற்றும் கிராம பொதுமக்கள் இணைந்து நடத்தும் கோரிக்கையை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### வெளிநாட்டில் வேலை வாங்கித்தருவதாக

# ரூ.7 லட்சம் மோசடி!

## கட்டிட தொழிலாளி கைது!!

**தம்மம்பட்டி,டிச.12**

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக, 7 லட் சம் ரூபாய் மோசடி செய்த வழக்கில், கெங்கவல் லியை சேர்ந்த கட்டிடத் தொழிலாளியை, தூத்துக்குடி போலீசார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே புனல்வாசலைச் சேர்ந்த வர் கனகராஜ் மகன் சந் துரு(27). இவர்,சென்னை யில் தனியார் கட்டிட (பில்டர்ஸ்)நிறுவனத்தில் வேலை செய்துவந்த, தூத் துக்குடி மாவட்டம் கீழக்க ரந்தை கிராமத்தை சேர்ந்த தெய்வசிகாமணி மகன் தேவதாஸ்(37)மற்றும், ஜெயராஜ் சாமி, முருக வேல், கருப்பசாமி, வேல் முருகன் , அருண் குமார், முனியசாமி ஆகியோ ருக்கு வெளிநாட்டில், மாதம் ஒரு லட்சம் ரூபாய் சம்பளத்தில் வேலை வாங்கித் தருவதாக் கூறி,க டந்த ஜூன் மாதம் ஒவ் வொருவரிடமும் தலா, ஒரு லட்சம் வீதம், 7 லட் சம் ரூபாய் பணம் பெற் றுக்கொண்டு, வேலை வாங்கி தராமல் மோசடி செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து, மோசடி செய்த சந்துருவைப் பற்றி, தூத்துக்குடி மாவட்ட குற் றப்பிரிவு போலீசில், தேவதாஸ் உள்பட 7 பேரும் புகார் அளித்தனர். தூத்துக்குடி போலீசார்,சந் துரு மீது வழக்குப் பதிவு செய்தனர்.

ஆனால் நடவடிக்கை எடுக்காததால், மதுரை உயர்நீதிமன்ற கிளையில்,



தேவதாஸ் வழக்கு தொடர்ந்தார். விசாரித்த நீதிமன்றம், சந்துருவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப டுத்த, தூத்துக்குடி போலீ சாருக்கு உத்தரவிட்டது.

அதையடுத்து, கெங் கவல்லி போலீசார் உதவி யுடன், தூத்துக்குடி போலீ சார், கெங்கவல்லி அருகே புனல்வாசலில் இருந்த சந்துருவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப டுத்தி, தூத்துக்குடி மத்திய சிறையில் அடைத்தனர்.

### தர்மபுரி

# ஆயுதப்படை போலீஸ்காரருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை!

**தர்மபுரி, டிச. 12**

தர்மபுரி ஆயுதப் படையில் போலீஸ்காரராக பணிபுரிந்து வந்தவர் வீரமணி(45). இவருடைய மனைவி பிரேமா(43). இவரும் போலீஸ்காரராக பணிபுரிந்து வந்தார். இவர்க ளுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 2017ம் ஆண்டு கணவன் மனை வியிடையே குடும்ப தகராறு ஏற்பட்டது. அப்போது கோப மடைந்த வீரமணி, பிரேமாவை தாக்கியுள்ளார். அப்போது பிரேமாவின் தலையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவ ருடைய சுயநினைவு பாதிக்கப்பட்டது. இதனால் வழக்க மான பணிகளை செய்ய முடியாமல் அவர் பாதிக்கப்பட் டார். இது தொடர்பாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் தர்மபுரி டவுன் போலீசார், வீரமணி மீது கொலை முயற்சி வழக்குப்பதிந்து அவரை கைது செய்து விசாரணை நடத்தி னார்கள். இந்த வழக்கு தர்மபுரி மாவட்ட விரைவு மகளிர் கோர்ட்டில் நடைபெற்றது. வழக்கு விசாரணையின் முடி வில் வீரமணி மீதான குற்றச்சாட்டு உறுதியானது.

இதனால் வீரமணிக்கு 10 ஆண்டு ஜெயில் தண்டனை மற்றும் ரூ. 20 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி அசின் பானு நேற்று தீர்ப்பளித்தார்.

### மோதகப்பல்லி கிராமத்தில்

# வீட்டின் அருகே தஞ்சம் அடைந்த மலைப் பாம்பு!



**ஆம்பூர், டிச.12**

திருப்பத்தூர்மாவட்டம் ஆம்பூர் அடுத்த மோதகப் பல்லி கிராமத்தில் பாபு என்பவரது வீட்டின் அரு கில் மலைப்பாம்பு ஒன்று தஞ்சம் அடைந்து இருப் பதை கண்டு ஆம்பூர்வனத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தக வலின் பேரில் ஆம்பூர் வனத்துறை அலுவலர் பாபு உத்தரவின் பேரில் வன ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மலைப் பாம்பை மீட்டு காரப்பட்டு காப்பு காட்டில் விட்டனர்.

### உளுந்தூர்பேட்டை அருகே

# துப்பாக்கியை விட்டு விட்டு வாலிபர் தப்பி ஓட்டம்!



**கள்ளக்குறிச்சி,டிச.12**

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்திற்கு உட் பட்ட குலாம் உசேன் தக்கா ஏரிக்கரை அருகே இருசக்கர வாகனத்தில், நாட்டு துப் பாக்கியுடன், மான், மயில் வேட்டையாட வந்தவர்கள் காவல்துறையை கண்டவு டன் துப்பாக்கி மற்றும் இரு சக்கர வாகனத்தை விட்டு விட்டு தப்பித்து ஓடி விட்ட னர், இருசக்கர வாகனம் துப் பாக்கியும் பறிமுதல் செய்து போலீசார் காவல் நிலையம் கொண்டு வந்தனர்.

தப்பி ஓடிய வாலிபரை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், தொரப்பள்ளி கிராமத்தில், ராஜாஜி பிறந்த இல்லத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, நடைபெற்ற ராஜாஜி 147வது பிறந்த நாள் நிகழ்ச்சியில், அவரது உருவ படத்திற்கு கலெக்டர் ச.தினேஷ் குமார் , ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி , செய்தி மக்கள்தொடர்பு அலுவலர் சு.மோகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டம் ஜிஞ்சுப்பள்ளியில்

# ரூ.12.85 கோடியில் நவீன நெல் சேமிப்பு வளாகம்!

## முதல்வர் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்!!

**கிருஷ்ணகிரி, டிச.12**

கிருஷ்ணகிரி மாவட் டம் ஜிஞ் சுப்பள்ளியில் 10 ஏக்கரில் ரூ.12.85 கோடி மதிப்பில்மேற்கூரையுடன் கூடியநவீனநெல்சேமிப்பு வளாகம் கட் டப்படுகி றது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் சார்பில் கட்டப்பட உள்ள இந்த கட்டிடத்திற்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று மாலை தலைமை செய லகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட் டினார். தொடர்ந்து ஜிஞ்சுப் பள்ளி யில் நடந்த நிகழ்ச்சியில் கலெக்டர் தினேஷ்கு மார், எம்.எல்.ஏ.க்கள் டி.மதியழ கன், ஒய்.பிர காஷ் ஆகியோர்பூமிபூஜை செய்துபணியைதொடங்கி வைத்தனர்.

பின்னர் கலெக்டர் பேசும்போது,

ஜிஞ்சுப்பள்ளியில் 10 ஏக்கரில் ரூ.12 கோடியே 85 லட்சத்தில் தலா 3 ஆயி ரம் டன் கொள்ளளவு கொண்ட வளாகம் என மொத்தம் 9 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட 3 நவீன நெல் சேமிப்பு வளா



கங்களுக்கான பணி தொடங்கி வைக்கப்பட் டுள்ளது. இந்த வளாகத் தில் அலுவலக கட்டிடம், சுமை தூக்கும் பணியாளர் களுக் கான அறைகள், காவலர், அறை, சுற்றுச்சுவர் உள்ளிட் டவை அமைக்கப்பட உள் ளன. இந்த பணியை விரை வாகவும், தரமாகவும் முடித்து நெல் சேமிப்பு பயன் பாட்டிற்கு வழங்க அலுவ லர்களுக்கு அறிவு றுத்தப்பட் டுள்ளது என் றார்.

இதில் தமிழ்நாடு நுகர்பொ. ருள் வாணிப கழக மண்டல பொது மேலாளர் தணிகாச லம், முன்னாள் எம்.எல்.ஏ. பி.முருகன், கிடங்கு துணை மேலாளர் சசிக்கு மார், தரக் கட்டுப்பாடு உதவி மேலாளர் வில்சன், உதவி பொறியாளர் பிரியா, நகராட்சி துணைத்த லைவர் சாவித் திரி, தி.மு.க. மாநில வர்த் தகர் அணி துணை செயலா ளர் அன்பர சன், மாவட்ட துணை செய லாளர் கோவிந்தசாமி, நகர பொறுப்பாளர் அஸ்லம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேந் திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகில் திருநாவலூர் மேற்கு ஒன்றியம் செம்மணங்கூர் ஊராட்சியில் திமுக சார்பில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி, திருநாவலூர்மேற்குஒன்றியகழகசெயலாளர்முருகன்தேர்தல்பணிகுழுஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன்,, மாவட்ட கவுன்சிலர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் மாயாவதி, கிளை கழக செயலாளர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், வாக்காளர் சீர்திருத்தம் செய்ததைப் பற்றியும், புதிய வாக்காளர்களை சேர்ப்பதை பற்றியும் கலந்து ஆலோசனை செய்து கழக நிர்வாகிகளுக்கும். பொதுமக்களுக்கும்விண்ணப்பம் வழங்கினார்.

# களர்பதி கிராமத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற பிரச்சாரம்!

## மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசந்தரசு துவக்கி வைத்தார்!!



**கிருஷ்ணகிரி,டிச.12**

களர்பதி கிராமத்தில் என் வாக்குச்சா வடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற பிரச் சாரம் மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசந்தரசு துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் திமு கவின் நான்காண்டுச் சாதனைகள் மக்கள் விழிப்புணர்வு நோட்டீஸ் மற்றும் தேர் தல் களம்! முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு நான் காண்டு கள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை யொட்டி, கட்சியின் செயல்பாடுகள் மற் றும் சாதனைகள் குறித்து பொதுமக்களி டையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வுகள் தீவிரமடைந்து வருகிறது.

வரும் சட்டமன்றத் தேர்தலைக் கருத் தில் கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர்அருகே உள்ளகலர்பதியில் மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசந்தரசு, தலைமையில்இன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற பிரச்சாரத்தை வீடாக சென்று துண்டு பிர சுரங்களை வழங்கி திமுக அரசின் சாத னைகள் குறித்து பெண்களிடமும், பொது மக்களிடமும் எடுத்துரைத்தார்.